**தலைப்பு 249 - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 249 - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுலை 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 வருமானம் மதிப்பீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் 2022 ஆண்டிற்காக 11 வருமான குறியீட்டிலக்கங்களின் கீழ் ரூபா 103,400,000,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் அனைத்து வருமான குறியீட்டிலக்கங்களின் ஆரம்ப வருமான மதிப்பீட்டை திருத்தியிருந்ததுடன் ஆரம்ப வருமான மதிப்பீட்டில் இருக்காத 3001.02.00 கொண்ட வருமான குறியீட்டிலக்கத்திற்குரிய திருத்திய மதிப்பீட்டின் கீழ் ரூபா 100,000,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 7 வருமான குறியீட்டிலக்கங்களின் மொத்த வருமான மதிப்பீட்டுக் கூட்டுத் தொகை ரூபா 25,310,000,000 இனால் குறைக்கப்பட்டிருந்தது. 5 வருமான குறியீட்டிலக்கங்களின் மொத்த வருமான மதிப்பீட்டு கூட்டுத் தொகை ரூபா 261,600,000,000 இனால அதிகரித்திருந்தது. 2003.05.00 திறைசேரி பிணைமுறி மிகையறவீடு மொத்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் ரூபா 14,200,000,000 ஆன வருமானம் ரூபா 8,900,000,000 இனால் அதிகரித்து வருமான மதிப்பீட்டை திருத்தியிருந்தது. ஒட்டுமொத்தமாக திணைக்களத்தினால் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் திரட்டுவதற்கு எதிர்பார்த்த வருமானம் ரூபா 236,290,000,000 இனால் அதிகரித்து மதிப்பீட்டை திருத்தியிருந்தது. | 2022 ஆண்டினுள் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமை மற்றும் நாட்டில் நிலவிய நிலையற்ற தன்மை காரணமாக வருமானம் சேகரிக்கும் பல நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டதன் மீது வருடாந்த வருமான மதப்பீட்டை திருத்தியுள்ளதுடன், அந்த வருமான குறியீட்டிலக்கங்களில் திருத்திய மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் வருமானம் எதிர்பார்த்த வருமானத்திலும் அதிகமாக கிடைத்த காரணத்தால் வருமானம் அதிகரித்துள்ளது. ஒவ்வொறு வருமான மூலங்களின் தன்மையின் பிரகாரம் வருட ஆரம்பத்தில் அல்லது மீளாய்வாண்டு ஆரம்ப 06 மாதங்களினுள் கிடைத்த உள்ளவாறான வருமானம் மற்றும் வருமானம் சேகரிக்கும் நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் திருத்திய வருமான மதிப்பீடுகளையும் அடிப்படையாக்க கொண்டு 100% எதிர்வுகூர்ந்து | நி.பி. 85 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு சரியான மற்றும் நடைமுறை சாத்திய மதிப்பீட்டை தயார்க்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியில் 12 வருமான குறியீடுகளில் இருந்து ரூபா 154,776,282,088 ஆன வருமானம் திரட்டப்பட்டிருந்தது. அதற்கிடையில் 7 வருமான குறியீடுகளில் ஆரம்ப வருமான மதிப்பீட்டை விஞ்சி வருமானம் திரட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் மதிப்பிடல் மற்றும் அவற்றை திருத்துதல் நடைமுறை சாத்தியமான அடிப்படையின் மீது இடம் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப/திருத்திய மதிப்பீட்டை தயாரிப்பதனை நடைமுறையாக மேற்கொள்ள முடியாது. ஏற்படும் நிலைமைகளை முன்கூட்டியே மதிப்பிட முடியாத இவ்வாறான வருமானம் இன்னும் காலப் பகுதியொன்று மற்றும் ஒப்பீட்டின் மூலமும் மதிப்பீடு செய்வது கடினமாகும். | |
| (ஆ) | திருத்திய வருமான மதிப்பீடு, உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பிடுகையில் 6 வருமான குறியீட்டிலக்கங்களிற்கு உரியதாக 97 சதவீத குறைவில் இருந்து 237 சதவீத அதிகரிப்பு வரையினால வீச்சளவில் மாற்றமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நி.பி. 85 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு சரியான மற்றும் நடைமுறை சாத்திய மதிப்பீட்டை தயார்க்க வேண்டியமை. |

### 2.1.2 நிலுவை வருமானம் சேகரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று 08 வருமான குறியீட்டிலக்கத்திற்குரிய நிலுவை வருமானம் ரூபா 261,543,883,717 ஆனதுடன் அவற்றில் ஒராண்டைவிட அதிக நிலுவை வருமானம் ரூபா 2,357,789,706 ஆகவிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியிலான நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் நிலுவை வருமானத்திற்கு ஒப்பாக 2022 திசெம்பர் 31 திகதியன்று மொத்த நிலுவை வருமானம் 57 சதவீத குறைவிலிருந்து 18443 ஆன அதிகரிப்பு வரையான வீச்சளவில் வித்தியசப்பட்டிருந்து. அதன் பிரகாரம், | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | வருமான குறியீட்டு இலக்கம் 20.02.02.99 இன் கீழ் வட்டி – ஏனைய வருமானங்களிற்குரிய நிலுவை வருமானம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 திசெம்பர் 31 திகதியளவில் 57 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிட நடடிவக்கை எடுக்கவேண்டும். |
| (ii) | வருமான குறியீட்டு இலக்கம் 20.03.99.00 இன் கீழ் - ஏனைய வருமானங்களிற்கு உரிய நிலுவை வருமானம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 திசெம்பர் 31 திகதியளவில் 247 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | வருமான குறியீட்டு இலக்கம் 20.06.04.00 இன் கீழ் கடன் மீள் அறவீடுகளிற்கு உரிய நிலுவை வருமானம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 திசெம்பர் 31 திகதியளவில் 18443 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவை வருமானம் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின் போது உடன்படிக்கை பிரகாரம் கடன் வட்டி மற்றும் கடன் தவணைகளை செலுத்தாததன் மீது 3 நிறுவனங்களிற்குரியதாக ரூபா 2,282,681,252 ஆன நிலுவை வருமானமொன்றை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று நிலவுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சர்வோதய பொருளாதார முயற்சிகள் அபிவிருத்தி சேவைகள் (கெரன்ட்) லிமிடட் ஆகிய நிறுவனங்கள் ஊடாக நிலுவை கடன் அறவீடு மேற்கொண்ட போதும், அந்த நிலுவை வருமானத்தை தொடந்தும் அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம், இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பதுரளிய மற்றும் மாவனல்லையில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகள் 02 எரோமா நெச்சுரல் இறப்பர் தனியார் கம்பனிக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆண்டு முதல் அந்த குத்தகை வருமானம், கடனை தீர்த்துக் கொள்வதற்காக அறவிடுவதற்கு நடவடிககை எடுத்தல், எல்பிட்டிய போர்ம் | நிலுவை வருமானத்தை செயற்திறனாக அறவிட நடடிவக்கை எடுக்க வேண்டும். |

இறப்பர் கைத்தொழிற்சாலையின் இயந்திர உபகரணங்களை மதிப்பிட்டு விற்பனை செய்வதன் மூலம் கடனை தீர்த்துக கொள்ளவும், சணச சங்கம் பதுள்ளை ஆன நிறுவனத்திற்குரிய நிலுவை கடன் மற்றும் வட்டித் தொகையை அறவிட வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2022.04.22 திகதி அறிவித்துள்ளதாக மற்றும் சர்வோதய பொருளாதார முயற்சிகள் அபவிருத்தி சேவைகள் (கெரன்ட்) லிமிடட் நிறுவனத்தின் நிலுவை கடனை மீள்பரிசீலனை செய்வதாகவும் அறிக்கை இடப்பட்டிருந்தது.

(ஈ) 2022 திசெம்பர் 31 திகதியன்று சமர்ப்பித்திருந்த நிலுவை வருமான கூற்றில் காணப்பட்ட கடந்த வருடத்திற்கு (2021) உரிய நிலுவை தொகையின் ஆரம்ப மீதி மற்றும் 2021 திசெம்பர் 31 திகதிக்கு முன்வைத்திருந்த ACA1 (i) படிவத்தில் காட்டியிருந்த நிலுவை வருமான இறுதி மீதிகளிற்கிடையில் பின்வரும் வித்தியாசங்கள் காணப்பட்டன

| வருமான குறியீட்டிலக்கம் | 2021 ஆண்டில் ஏசீஏ-1(i) அறிக்கையின் படி 2021.12.31 திகதி நிலுவை வருமான இறுதி மீதி | 2022 ஆண்டில் ஏசீஏ-1(i) அறிக்கையின் படி 2022.01.01 திகதி நிலுவை வருமான மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 20.02.01.99 | 6,938,319 | 7,118,319 | (180,0 |
| 20.02.02.99 | 22,565,926 | 22,564,779 | 1,1 |
| 20.03.99.00 | 25,310,655 | 71,264,326 | (45,953,6 |
| 20.05.99.00 | - | 62,622,634 | (62,622,6 |

வித்தியாசங்களிற்கான காரணம் பின்வருமாறு

| வருமான குறியீட்டிலக்கம் | வித்தியாசத்திற்கான காரணம் |
|---|---|
| ----------- | ------------------------ |
| 20.02.01.99 | இலங்கை சுங்கத்தினால் 2021.12.31 திகதி காட்டி இருக்காத நிலுவை வருமானம் ரூபா 180,000 தொகை 2022.12.31 திகதிய நிலுவை வருமான அறிக்கையில் காட்டியிருந்தமை. |
| 20.02.02.99 | அலுவலர் ஒருவர் ஓய்வு பெற்ற காரணத்தால் இவ்வித்தியாசம் ஏற்பட்டதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளதாக. |
| 20.03.99.00 | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் 2021.12.31 திகதி காட்டியிருக்காத ரூபா 44,633,775 ஆன நிலுவை தொகையொன்றை 2022.12.31 திகதி வழங்கிய நிலுவை வருமான அறிக்கையில் காண்பித்து இருந்தமை மற்றும் கடன் நிவாரண சபை திணைக்களத்தின் 2021.12.31 திகதி ரூபா |

ஆண்டு இறுதியில் குறித்த வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நிலுவை வருமான அறிக்கைகளை இணக்கம் செய்து கொள்ள வேண்டும்

160,703 தொகை தவறுதலாக நிலுவை வருமானமாக குறிப்பிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

20.05.99.00 ஓய்வூதிய திணைக்களத்தினால் 2021.12.31 திகதி காட்டியிருக்காத ரூபா 62,622,634 ஆன நிலுவை தொகையொன்றை 2022.12.31 திகதி வழங்கிய நிலுவை வருமான அறிக்கையில் காட்டியிருந்தமை. அந் நிலுவைத் தொகையை 2022 ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது.

(உ) 2022 திசெம்பர் 31 திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்த நிலுவை வருமானக் கூற்றில் கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டளவில் (2020) குறித்த நிலுவை தொகையின் ஆரம்ப மீதிகள் மற்றும் 2021 திசெம்பர் 31 திகதியன்று முன்வைத்திருந்த ACA1(i) படிவத்தில் காட்டியிருந்த நிலுவை தொகையின் இறுதி மீதிகளிற்கிடையில் பின்வரும் வித்தியாசங்கள் நிலவின.

| வருமான குறியீட்டிலக்கம் | 2021 ஆண்டிற்குரிய ஏசீஏ-1(i) அறிக்கையின் படி 2020 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமான இறுதி மீது ரூபா | 2022 ஆண்டிற்குரிய ஏசீஏ-1(i) அறிக்கையின் படி 2021 ஆண்டிற்கு முன்னைய ஆண்டளவில் நிலுவை தொகை ஆரம்ப மீதி ரூபா | வித்தியாசம் ரூபா |
|---|---|---|---|
| --------- | ----------- | ----------- | ------------ |
| 2002.01.99 | 405,000 | 510,000 | (105,000) |
| 2003.02.99 | 805,561 | 1,055,110 | (249,549) |
| 2003.99.00 | - | 27,047,153 | (27,047,153) |

நிலுவை வருமானம் இணங்காமைக்கான காரணம் பின்வருமாறு

| வருமான குறியீட்டிலக்கம் | வித்தியாசத்திற்கு காரணம் |
|---|---|
| ------------ | -------------------- |
| 20.02.01.99 | இலங்கை சுங்கத்தினால் 2021.12.31 திகதி வழங்கிய நிலுவை வருமான அறிக்கையில் காட்டிருக்காத போதலும் 2022.12.31 திகதிற்கு வழங்கிய நிலுவை வருமான அறிக்கையில் 2020 ஆண்டிற்காகரூபா 105,000 ஆன நிலுவை தொகையொன்று காட்டிருந்தமை. |
| 20.03.02.99 | வியாபார மற்றும் கடற்படை செயலகத்தில் நிலுவை தொகைகளின் அன்னி செலாவனி விகித முரணை சீராக்கம் செய்தமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாகியுள்ளது. |
| 20.03.99.00 | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் 2021.12.31 திகதி வழங்கிய நிலுவை வருமான அறிக்கையில் காண்பித்து இருக்காத போதிலும் 2022.12.31 திகதி வழங்கிய நிலுவை வருமான அறிக்கையில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்குரிய ரூபா 27,047,153 ஆன நிலுவை தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. |

ஆண்டு இறுதியில் குறித்த வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நிலுவை வருமான அறிக்கைகளை இணக்கம் செய்து கொள்ள வேண்டும்

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவின விடயங்கள் 07 இற்காக மிகை ஏற்பாடு வழங்கியதன் காரணமாக அந்த ஏற்பாட்டை ஆண்டினுள் பயன்படுத்திய பின்னர் ரூபா 13,140,579 ஆன சேமிப்பு நிலவியதுடன், அந்த சேமிப்பு தேறி ஏற்பாட்டின் 26 சதவீதம் முதல் 80 சதவீதத்திற்கு இடையிலான விச்சளவிலான விகிதத்தை கொண்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நி.பி. 50 பிரகாரம் மதிப்பீடு சரியாக மற்றும் நடைமுறை சாத்தியமானதுமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீட்டை மற்றும் திருத்திய செலவின மதிப்பீட்டை ஒப்பிடுகையில் 4 செலவின விடயங்களிற்கு உரியதாக முரண்பாடு 66 சதவீத குறைவு முதல் 224 சதவீதமான அதிகரிப்பு வரை வீச்சளவினுள் வித்தியாசமாக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நி.பி. 50 பிரகாரம் மதிப்பீடு சரியாக மற்றும் நடைமுறை சாத்தியமானதுமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெறாது பேணிச் செல்லும், 2022 திசெம்பர் 31 திகதிக்கு கூட்டுத்தொகை ரூபா 34,979,074 ஆன 13 வைப்பு கணக்குகள் காணப்பட்டன. இந்த வைப்புக் கணக்குகள் வெளிநாட்டு மானியம் பெறுவனவுகளிற்கு உரியதானதுடன், அந்த மீதி பல வருடங்களாக செயலற்று காணப்பட்டது. இந்த மானியம் அவை வழங்கப்பட்டுள்ள உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், அவ்வாறு செய்ய முடியாவிடின் அதனை நிதிப்பிரமாணம் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | வைப்பு கணக்கில் உள்ள தொகையை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவது தொடர்பாக கண்காணிப்பு செய்வது இந்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான நடவடிக்கையாவதுடன் கருத்திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனத்தினால் செய்யப்படும் கட்டுநிதி கோரிக்கை மற்றும் உரிய செலவின விடயத்தில் காணப்படும் ஏற்பாட்டு அளவை அடிப்படை கொண்டு கட்டுநிதியை விடுவிக்கும் பொறுப்பு இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும். | மானியங்கள், அவை வழங்கியுள்ள நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறு செய்ய முடியாவிடின் நி.பி. 570 பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்க வெண்டும். அதற்காக குறித்த நிறுவனங்களை அறிவூட்டவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்டுள்ள வைப்பு தொடர்பாக தற்போது குறித்த கருத்து திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்களின் வைப்பு மீதிகள் பற்றி அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கு கிடைக்கும் பதிலின் மீது முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | |

**2.4 வங்கி கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 387 பிரகாரம் எந்தவொரு அரச வங்கி கணக்கிலிருந்துமு மேலதிக பற்றை பெற்றுக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ள போதும், ஓய்வூதிய பணிப்பாள் நாயகத்தின் மக்கள் வங்கி கணக்கு மூலம் 2002 மே 09 திகதி வங்கி மேலதிக பற்று வசதிகள் பெறப்பட்டுள்ளதுடன், அத்திகத்திற்கு அந்த கணக்கில் பற்று மீதியான ரூபா 7,727,113,034 ஆன பெருமதிக்காக ரூபா 30,925,253 மேலதிக பற்று வட்டி செலுத்த நேரட்டிருந்தது. | நாட்டினுள் கடுமையான பொருளாதார நெருக்கடி ஆரம்பித்ததுடன் 2022 ஆண்டில் மே மாத ஓய்வூதியத்தை கொடுப்பதற்காக திறைசேரி பிரதி செயலாளரின் வங்கி கணக்கில் திரவத்தன்மை போதாத காரணத்தால், ஓய்வூதிய திணைக்கள வங்கி கணக்கிற்கு ஓய்வூதியத்திற்காக வநியோகிக்கப்பட்ட நிதிய அளவு அனுப்பப்பட்டு இருக்கவில்லை. ஓய்வூதியதாரர்களுக்து உரிய திகதிக்கு ஓய்வூதியம் செலுத்த வேண்டியதால் மக்கள் வங்கியினால் அச் சந்தர்ப்பத்தில் ஓய்வூதிய திணைக்கள வங்கி கணக்கு ஊடாக ஓய்வூதியம் செலுத்த நடவடிக்கை எடுக்க நேரிடுவதால் சில நாட்களிற்கு மாத்திரம் செல்லுபடியாகுவாறு குறித்த உத்தியோகபூர வங்கி கணக்கில் மேலதி பற்றொன்றை போணிச் செல்ல நேர்ந்தது. | நி.பி. 387 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை

#### 3.1.1 அரச கடன்களை கணக்கீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு கடன்களிற்கு உரியதாக காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதற்காக பொருத்தமான முறைமை ஒன்றை திணைக்களத்தினால் அறிமுகம் செய்திருக்கவில்லை. | வெளிநாட்டு கடன்களிற்கு உரிய காசுப் பாய்ச்சல் மதிப்பீடுகளை அவ்வாறே திறைசேரி காசு பாய்ச்சலுக்காக நேரடியாக பயன்படுத்த முடியாது. வரவு செலவுத்திட்ட நிவாரணமாக கிடைக்கும் வெளிநாட்டு கடன் (Budgetary supported foreign loans) தவறிந்த ஏனைய கடன் காசு பாய்ச்சல்கள் உரிய கருத்திட்டத்தின் குறித்த பணிகளை மேற்கொள்வதற்காக வழங்கப்படுவதால் அது தொடர்பாக உரிய அபிவிருத்தி தரப்பினருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை பிரகாரம் மாற்றுதல் இடம் பெறுவதாக உறுதி செய்கிறேன் | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம், 2022 ஆண்டில் மற்றும் 2021 ஆண்டில் அல்லது அதற்கு முன் மாற்றப்பட்ட போதிலும் 2022 ஆண்டு இறுதியிலும் கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன்களின் பெருமதிகள் முறையே ரூபா 10,665.4 மில்லியன் மற்றும் ரூபா 3.6 மில்லியன் ஆனது. அவ்வாறாயினும் கணக்காய்வின் கணக்கிடலின் பிறகாரம் இவ்வாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன்களின் 2022 திசெம்பர் 31 திகதிக்கு மொத்த பெறுமதி ரூபா 11,700.6 மில்லியன் ஆனதில் ரூபா 1,031.5 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் மாற்றப்பட்டுள்ள போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதிகள் காணப்படுவதன் காரணத்தால் 2022 திசெம்பர் 31 திகதிக்கு நிதி நிலைமை கூற்றில் முன்வைக்கப்பட்டுள்ள | கணக்காய்வு அவதானத்துடன் இணங்குகிறேன். | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு கடன் பெறுமதிகள் சரியானதல்ல என அவதானிக்கப்பட்டது. கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன் தொகை பயன்படுத்தி ஏதேனும் செலவு மேற்கொள்ளப்பட்டிருப்பின் அச்செலவு மீளர்யவாண்டு கூற்றுகளில் உள்ளடங்காது இருக்க முடியும் என மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மீலாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் திறைசேரி செயற்பாட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் கடன் இலக்கம் 2001042 இற்குரிய யூரோ 1,057,552 அல்லது ரூபா 240 பில்லியனான கணக்கீடு செயப்படாத கடன் மீதியாக உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறாயினும் மீளர்யவாண்டில் அரச நிதிக்கூற்றுகளில் குறிப்பிலக்கம் 30(11) இனுள் இக்கடன் தொகையின் ஆரம்ப மீதி யூரோ 5,644,462 ஆகவும் ஆண்டில் எவ்வித மாற்றுதல் அல்லது மீள் செலுத்துதல் இன்றி 2022 திசெம்பர் 31 திகதிக்கு அக்கடன் மீதி யூரோ 6,702,014 ஆகவும் காண்பிக்கப்பட்டு இருந்தது. | இலக்கம் 2001042 கொண்ட கடன் உடன்படிக்கையின் கீழ் யூரோ 1,057,552 ஆன தொகை 2021 ஆண்டினுள் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் மாற்றப்பட்ட கடன் தொகை ஒன்றல்லாததால் 2023.02.17 திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச நிதிக்கூற்றுகளில் நிதிநிலைமை கூற்றில் முழுமையாக புறம்பாக பேணப்பட்டு வந்த 08 கடன் வகைகளிற்குரிய ரூபா 518,293 மில்லியனான கடன் மீதிகள் மீளாய்வாண்டினுள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக அரச நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசினால் கடன் பெற்றுக் கொள்வதனை திரண்ட நிதியத்தின் ஊடாக கணக்கீடு செய்வது பொதுவான முறைமையான போதும் மேற்குறிப்பிட்ட 08 கடன் வகைகளையும் திரண்ட நிதியத்தினூடாக கணக்கீடு செய்ய முடியாமல் இருந்த போதும் இந்த 08 கடன் வகைகளுக்கும் உரிய கடன் தவணைகள் திரண்ட நிதியம் ஊடாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | குறித்து நிதியாண்டினுள் வரவு செலவு பற்றாக்குறையை நிதியீட்டம் செய்ய ஒதுக்கீட்டு அதிகார சட்டத்தின் கீழ் கடன் பெற்றுக் கொள்ளப்படாததால் திரண்ட நிதியத்தினூடாக கணக்கீடு செய்யத் தேவை இல்லை.<br><br>இந்த 08 கடன் உடன்படிக்கைகளில் ஹம்பந்தொட்ட துறைமுகம் (2017 முதல்) மற்றும் நொரச்சோளை நிலக்கரி மின் உற்பத்தி கருத்திட்டத்திற்காக பெற்ற கடன் தொகைகளின் தவணைகள் திரண்ட நிதியத்தினூடாக செலுத்தப்பட்டதுடன் மத்தள விமான நிலைய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு பெற்ற கடன் தொகையை பரிமாற்றப்பட்டது விமான நிலைய மற்றும் விமான சேவை கம்பனியின் கீழாகுமென அறிக்கையிடுகிறேன். | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |

<table>
<tr>
<td>(உ)</td>
<td>முனைய ஆண்டில் கடன் உடன்படிக்கை இரண்டிற்காக அரச நிதிக்கூற்றுக்களில் வேறுபட்ட நாணய பரிமாற்று அலைகளை பயன்படுத்திய காரணத்தால் குறித்த கடன் மீதிகள் ரூபா 340 மில்லியன் மற்றும் ரூபா 285 மில்லியினால் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கை பிரகாரம் வித்தியாசமாக காணப்பட்டது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டினுள் அந்த இரண்டு வகை கடன்களிற்கும் உரியதான ஆரம்ப மீதிகளில் கடன் நாணய பரிமாற்று அலகு வகையை மாத்திரம் மாற்றியிருந்த போதும் ஆரம்ப மீதிகளை சீராக்கி இருக்கவில்லை. அதன் பிரகாரம் கடன் தொகையின் ஆரம்ப மீதிகளின் வித்தியாசம் மீளாய்வாண்டில் ஏற்பட்ட நாணயமாற்று நட்டத்தினுள் உள்வாங்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு கடன் மீதிகளிற்குரியதாக அரச நிதிககூற்றுகள் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கை பிரகாரம், நாணயமாற்று நட்டங்களிற்கிடையில் மேற்குறிப்பிட்ட பெருமதிக்கு சமனான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது</td>
<td>குறித்த இரண்டு கடன் உடன்படிக்கைகளிற்கு உரயதாக 2021 திசெம்பர் 31 திகதிக்கு சரியான கடன் மீதி, கடன் பரிமாற்று தொகையினால் (Loan Currancy) நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 திசெம்பர் 31 திகதிக்கு உரியதாக சரியான நாணயமாற்று வீகிதத்தை பயன்படுத்தி அத்திகதியில் காணப்பட்ட குறித்த கடன் பொறுப்பு இலங்கை பணத்தில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.</td>
<td>அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும்.</td>
</tr>
<tr>
<td>(ஊ)</td>
<td>கடன் இலக்கம் 2021008 மற்றும் 2021016 இற்காக 2021 ஆண்டில் பெற்றுக் கொண்ட CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கை பிரகாரம் 2021 தசெம்பர் 31 திகதிக்கு மீதிகள் குறிப்பிடப்பட்டு இருக்காத போதும் 2022 திசெம்பர் 31 திகதிக்கு பெற்றுக் கொண்ட அந்த அறிக்கையினுள் 2022 சனவரி 01 திகதிக்கு பின்வருமாறு ஆரம்ப மீதிகள் அவதானிக்கப்பட்டன.
<table>
<tr><th>கடன் இலக்கம்</th><th>கடன் தொகை வகை</th><th>கடன் தொகை</th><th>பெறுமதி<br>ரூபா</th></tr>
<tr><td>2021008</td><td>USD</td><td>392,385</td><td>78,647,303</td></tr>
<tr><td>2021016</td><td>USD</td><td>12,500</td><td>2,505,423</td></tr>
</table>
அவ்வாறே அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2022 சனவரி 01 திகதிக்கு மேற் குறிப்பிட்ட இரண்டு கடன் வகைகளிற்காக ஆரம்ப மீதிகள் இருக்காததுடன் மீளாய்வாண்டினுள் மாற்றப்பட்டவையாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இந்த கடன் பெறல் எந்த</td>
<td>இந்த இரண்டு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக மாற்றப்படல் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் இந்த திணைக்களத்திற்கு 2022 ஆண்டில் அறிவித்து உள்ளதுடன் அதன் பிரகாரம் 2022 திசெம்பர் மாதம் கணக்கு பொழிப்பறிக்கை ஊடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது</td>
<td>அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும்.</td>
</tr>
</table>

அண்டில் மாற்றப்பட்வை என தெளிவாகவில்லை.

| கடன் இலக்கம் | கடன் தொகை வகை | மாற்றப்பட்ட கடன் தொகை | பெறுமதி<br>ரூபா |
|---|---|---|---|
| ---------- | -------- | -------- | ----------- |
| 2021008 | USD | 392,385 | 78,280,893 |
| 2021016 | USD | 472,500 | 168,106,589 |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கடன் இலக்கம் 2002054 உரியாதாக 2022 சனவரி 01 திகதிக்கு கடன் மீதி யூரோ 11 அல்லது ரூபா 2,495 மாத்திரம் ஆனதுடன இந்த கடன் தொகைக்குரியதாக மீளாய்வாண்டினுள் எவ்வித கடன் மாற்றலும் இல்லாது 2022 திசெம்பர் 31 திகதிக்கு குறித்த கடன் மீதி யூரோ 4,373 அல்லது ரூபா 1,692,045 ஆகவிருந்தது, | ஏற்றுக் கொள்ளிறேன். | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |
| (ஏ) | இரண்டு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக தவறுடன் கூடிய அன்னிய செலாவணி பரிமாற்று விகிதத்தை பயன்படுத்தியதன் காரணத்தால் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையை விட நிதிக்கூற்றுக்களில் அந்த இரண்டு கடன் வகைகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 4,820,798 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளிறேன். 02 கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக அன்னிய செலாவணி விகிதம் ரூபா 483.2413 இற்கு பதிலாக ரூபா 484.2413 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தவறுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. 2023 இல் சரிசெய்ய குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |
| (ஐ) | இரண்டு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுத் தொகை ரூபா 1,803,456 மறை கடன் மீதிகள் அரச நிதிக்கூற்றுக்களில் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையில் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளிறேன். | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |
| (ஒ) | நான்கு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 652,634,243 ஆன மறை கடன் மாற்றப்பட்டல் அரச நிதிக்கூற்றுக்களில் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையில் காட்டப்பட்டிருந்ததுடன் இரண்டு கடன் உடன்பக்கை தொடர்பாக கூட்டுத் தொகை ரூபா 154,795,691 மறை கடன் மாற்றப்படல் அரச நிதிக்கூற்றுக்களில் மாத்திரம் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளிறேன். கருத்திட்டம் நிறைவடைந்த காரணத்தால் கடன் மானியதாரரினால் அனுப்பப்பட்ட தொயிலிருந்து செலவிடப்படாது சேமிக்கப்பட்டுள்ள தொகை மீள் அனுப்பப்பட்ட காரணத்தால் இந்த மறை கடன் மாற்றப்படல் ஏற்பட்டுள்ளது. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | இரண்டு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுத் தொகை ரூபா 24,945,542 ஆன மறை கடன் மாற்றப்படல் அரச நிதிக்கூற்றுக்களில் மாத்திம் அவதானிக்கப்பட்டதுடன் அந்த மீதிகளிற்குரியதாக CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையில் 2021 திசெம்பர் 31 திகதிக்கு மீதிகள் (முன்னைய ஆண்டு இறுதி மீதிகள்) மற்றும் 2022 சனவரி 01 திகதிக்கு மீதிகள் (மீளாய்வாடு ஆரம்ப மீதிகள்) இடையில் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளிறேன். கருத்திட்டம் நிறைவடைந்த காரணத்தால் கடன் மானியதாரரினால் அனுப்பப்பட்ட தொயையிலிருந்து செலவிடப்படாது சேமிக்கப்பட்டுள்ள தொகை மீள் அனுப்பப்பட்ட காரணத்தால் இந்த மறை கடன் மாற்றப்படல் ஏற்பட்டுள்ளது. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |

### 3.1.2 வெளிநாட்டு மானியம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டு மானியம் (பணமாகக் கிடைத்தது) மீளாய்வாண்டில் கிடைத்த வெளிநாட்டு மானியம் செலவின கூட்டுத்தொகை ரூபா 3,218 மில்லியனாக காட்டப்பட்டிருந்தவுடன் குறித்த பேரேட்டின் பிரகாரம் அந்த செலவின கூட்டுத்தொகை ரூபா 3,190 மில்லியன் ஆனது. இவ் வித்தியாசத்தினுள் கூட்டுத்தொகை ரூபா 27.7 மில்லியன் ஆன வெளிநாட்டு மானியம், குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது மீளாய்வாண்டில் அரச வருமானத்திற்கு செலவிக்கப்பட்டிருந்தது. | மானியமாக கிடைத்த நிதியை குறித்த நோக்கத்திற்கு ஈடுபடுத்தியதன் பின்னர் ஏதேனும் நிதி மேலும் எஞ்சி இருப்பின், அந்நிதியை மானியதாரருக்கு திருப்பி அனுப்புதல் அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். அவ்வாறு மானியதாரரிற்கு தருப்பி அனுப்ப தேவையில்லாத சந்தர்ப்பங்களில் சேமிப்பாகும் மீதியை அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் மேற்கொள்ள வேண்டும். இங்கு உலக உணவு நிகழ்சித் திட்டத்திற்கு கிடைத்த ரூபா 2.7 மில்லியனான தொகையை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது குறித்த மானிய நிறுவனத்தின் நிதி கிடைக்க முன்னர் அரச நிதியங்களினால் செலவிடப்பட்டிருந்ததனால் ஆகும். இங்கு உள்ளடங்கு ரூபா 24.9 மில்லியன் ஆன நிதி தொழில்நுட்ப மானியத்திற்குரிய பெறுகைகள் செயற்பாடு உரிய காலத்தினுள் இடம்பெறாததால் | மானியதாரர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் கிடைத்த வெளிநாட்டு மானியத்தை உரிய நோக்கத்திற்கு ஈடுபடுதல் தொடர்பாக ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்கமைப்பை வலுப்பெறச் செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட்ட தாமத கட்டணம் ஆகும். | |
| (ஆ) | 2022 சனவரி 01 திகதி அளவில் இலங்கை அரசிற்கு வெளிநாட்டு மானியமாக கிடைத்துள்ள எனினும் 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் குறித்த நிதியத்திற்கு பயன்படுத்தாது விளைவற்று நிலவிய வெளிநாட்டு மானிய பெருமதி ரூபா 57.4 மில்லியன்களாகும். | வெளிநாட்டு மானியமாக கிடைக்கும் நிதியை குறித்த நிதியத்திற்கு அவ்வாறு இல்லையெனில் குறித்த கருத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுவதா என கண்டறிதல், இந்த திணைக்களத்தில் விடய பரப்பிற்கு புறம்பான நடவடிக்கை ஆவதுடன் அது தொடர்பாக நேரடியாக நடவடிக்கை எடுப்பது தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வள திணைக்களத்தினால் ஆகும். எவ்வாறாயினும் குறித்த வைப்பு கணக்குகளில் சேமிப்பாகவுள்ள மீதிகளை குறித்த கருத்திட்டதிற்கு பயன்படுத்துமாறும், எவ்வாறு செய்யாவிடின் வருமானத்திற்கு செலவு வைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, அடிக்கடி குறித்த நடைமுறைப்படுத்தும் நிறுவனத்திற்கு (Implementing Agencies) கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | மானியதாரர்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் கிடைத்த வெளிநாட்டு மானியத்தை உரிய நோக்கத்திற்கு ஈடுபடுதல் தொடர்பாக ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்கமைப்பை வலுப்பெறச் செய்தல். |
| (இ) | மீளாய்வாண்டினுள் 04 மானியதாரர்கள் இடமிருந்து 05 கருத்திட்டங்களிற்காக இடைத்திருந்த எனினும் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாத கூட்டுத்தொகை ரூபா 34,740,561 ஆன வெளிநாட்டு மானியம் மீண்டும் மானிதாரரிற்கு அனுப்பப்பட்டிருந்தது. | குறித்த கருத்திட்டத்திற்காக கிடைத்த நிதியை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்திய பின்னர் மேலும் ஏதேனும் நிதி சேமிப்பானால் மற்றும் அந்த சேமிப்பு தொகையை மானியதாரினால் கோரப்படுமாயின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் ஒருமைப்பாட்டுடன் குறித்த கருத்திட்ட செயல்படுத்தும் நிறுவனத்தின் கோர்க்கை பிரகாரம் மானிய நிறுவனத்திற்கு மீள் திருப்பி அனுப்புதல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கிடைத்த வெளிநாட்டு மானியத்தை உச்ச நிலையில் பயன்படுத்த வேண்டும். |

### 3.1.3 உபகடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறித்த நிறுவனம் தொடர்பான உப கடன் உடன்படிக்கை பிரகாரம் அதனை திருப்பி செலுத்தாத காரணத்தால் 5 உபகடன் உடன்படிக்கைகள் தொடர்பாக 4 நிறுவனங்களில் இருந்து 2022 திசெம்பர் 31 திகதியளவில் அறவிட வேண்டிய உபகடன் தவணைகளில் கூட்டுப் பெறுமதி ரூபா 260,503 மில்லன்கள் ஆனது. அவற்றில் ரூபா 778 மில்லியன் கூட்டுத் தவணை பெறுமதிகள் 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் மீதியாகும். | உப கடன் உடன்படிக்கை பிரகாரம் கடன் செலுத்தாத காரணத்தால் 5 உபகடன் உடன்படிக்கைகளுகாக 4 நிருவனங்களினால் 2022 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய உபகடன் தவணைகளில் கூட்டுப்பெறுமதி ரூபா 260,503 மில்லியன் ஆனது. | அரச உப கடன் வழங்கல், அறவிடல் மற்றும் உப கடன் சேவைகளை கணக்கீடு செய்தலை முறையாக்க வேண்டும் |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று உபகடன்களிற்காக கிடைக்க வேண்டிய வட்டி பெறுமதி ரூபா 912 மில்லியனாதுடன், 3 நிறுவனங்கள் குரித்த உடன்படிக்கை பிரகாரம் பொது திறைசேரிக்கு 2022 ஆண்டிற்குரியதாக எவ்வித வட்டித் தொகையையும் செலுத்தி இருக்காததுடன், அவற்றில் 5 ஆண்டுகளை விஞ்சிய செலுத்தப்படாத வட்டி வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 616 மில்லியனானது. | 2022.12.31 திகதியன்று உபகடனிற்காக மேலும் கிடைக்க வேண்டிய வட்டி பெறுமதி ரூபா 912 மில்லியனாகும். | அரச உப கடன் வழங்கல், அறவிடல் மற்றும் உப கடன் சேவைகளை கணக்கீடு செய்தலை முறையாக்க வேண்டும் |
| (இ) | 2022 ஆண்டில் ரூபா 318,061 மில்லியன் ஆன கூட்டு உபகடன் மீதியொன்றை வழங்கி இருந்ததுடன் அவற்றில் ரூபா 285,191 மில்லியனான உபகடன் மீதியொன்று 6 நிறுவனங்களுக்காக மீளாய்வாண்டில் புதிய உபகடன் மீதிகளாக வழங்கப்பட்டிருந்தன. இந்த உபகடன் பெறுமதி மீளாய்வாண்டில் வழங்கியிருந்த மொத்த பெறுமதியின் 90 சதவீதாக இருந்தது. | 2022 ஆண்டில் புதிய கடன் மீதிகளாக 6 நிறுவனங்களிற்கு உரியதாக ரூபா 285,199 மில்லியன் ஆனது. | அரச உப கடன் வழங்கல், அறவிடல் மற்றும் உப கடன் சேவைகளை கணக்கீடு செய்தலை முறையாக்க வேண்டும் |

### 3.1.4 திறைசேரி பிணைமுறி மற்றும் நிவாரண கடிதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 இன் 12 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) சட்டம் பிரகாரம், வினைமுறி வழங்கும் எல்லை கடந்த இரண்டு நிதி ஆண்டுகளுடன் மீளாய்வு நிதியாண்டிற்காக மொத்த தேசிய உற்பத்தியின் கூட்டுத்தொகையின் சதவீதமாக 15 ஆகும். அதன் பிரகாரம் 2022 ஆண்டிற்குரியதாக ரூபா 2,826,300 மில்லியனான எல்லையினுள் வினைமுறி விநியோகிக்கப்பட வேண்டிய போதும் ரூபா 2,908,515 மில்லியன் வரை பிணைமுறை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் ரூபா 82,214 மில்லியன் ஆன திறைசேரி வினைமுறி எல்லையை விஞ்சி விநியோகிக்கப்பட்டிருந்தது. | 2022 மார்ச் மாத ஆரம்பப் பகுதி முதல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக அன்னியச் செலாவணி விகிதம் அசாதாரணமாக அதிகரித்த மையால் அமெரிக்கா டொலரிற்கு ஒப்பாக இலங்கை ரூபா 80 சதவீத அளவு பெருமதி இறக்கமான காரணத்தால் திறைசேரி பிணைமுறி எல்லை 2022.12.31 அளவில் அதன் உச்ச எல்லையை மிஞ்சியது. 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தத்தின் கீழ், 2022 ஆண்டில் சிறைசேரி பிணைமுறை விநியோகிக்கும் போது அரச நிதி விதியிலிருந்து வெளிச்சென்ற காரணத்தால் அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள அரச நிதி திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட உத்தேசத்திற்கு 2023.02.20 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அது தொடர்பாக எடுக்க வேண்டிய முன் நடவடிக்கைகள் தொடர்பாக அத் திணைகளம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. | 2021 இன் 12 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) சட்டம் பிரகாரம், பினைமுறி திறைசேரி விநியோக எல்லையை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியளவில் வெளி நிறுவனத்திற்கு 239 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 2,793,987 மில்லியனான திறைசேரி பிணைமுறி மற்றும் 19 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 114,527 மில்லியனான நிவாரண கடிதங்கள் விநியோகிக்கப்பட்டு இருந்தன. மீளாய்வாண்டில் அரச நிதிக்கூற்றுகளின் பிரகாரம், வெளி நிறுவனங்களுக்கு 09 சந்தர்ப்பங்களில் விநியோகித்த ரூபா 45,628 மில்லியன் பெறுமதியான திறைசேரி பினைமுறி மற்றும் 13 சந்தர்பங்களில் விநியோகிக்கப்பட்ட ரூபா 66,637 பில்லியன் பெறுமதியான நிவாரண கடிதங்கள் 2022 திசெம்பர் 31 திகதி அளவில் காலாவதியாகி இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரயானதாகும். | வங்கிப் பிணைமுறை மற்றும் நிவாரண கடிதம் விநியோகிக்கும் செயல்முறையை முறையாக மட்டும் நாலாவதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும். |

**4 மனிதவள முகாமைத்தவம்**

**4.1 இணைக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதிக்கு திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்தில் பிரதிப் பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் பதவிகள் 07 உம், இரண்டாம் மட்டத்தில் உத்தியோகத்தர் பதவிகள் 08 உம் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 07 பதவிகளும் 22 பதவிகளுமாக 22 பதிவி வெற்றிடமாக காணப்பட்டன. | 2022.12.31 திகதிற்கு 22 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | திணைக்களத்தில் கடமைப் பொறுப்புக்களை மேற்கொள்ள முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்பவும், தேவையற்ற பதவி காணப்படுமானால் அவற்றை திருத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |